**கஹவத்த பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 18 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கஹவத்த பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் அடிப்படையில் 05 வேலைகளுக்குரிய நிர்வாகச் செலவினமாகச் செலவிடப்பட்ட ரூபா 89,788 கூட்டுமொத்தமும் மூலதனப் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு வருமானம் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக வரிசை அமைச்சிலிருந்தும், சப்ரகமுவ மாகாண சபையிலிருந்தும் மற்றும் கஹவத்த பிரதேச செயலகத்திடமிருந்தும் கிடைக்க வேண்டிய நிர்வாகச் செலவினமான ரூபா 204,393 கூட்டுமொத்தமும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 283,061 கூட்டுத்தொகையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 97,435,042 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 1.3.3 இணங்காமைகள்

##### 1.3.3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 204 ஆம் விதி | - | பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்ட மேடையின் ஒரு பகுதி தொடர்பாக மெய்மையாய்வுச் சபையின் சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| | (i) நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105 | 115,443 | முன்னைய ஆண்டின் போது ஏற்பட்டிருந்த வாகன விபத்துக்களுக்கு உரிய காப்புறுதி மேவுகையின் மூலம் மீளளிப்புச் செய்யப்படாத நட்டம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 110 | - | நட்ட இழப்பு தொடர்பாக பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 371 | 153,142 | 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான 08 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2017 பெப்ரவரி 08 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளரின் சுற்றறிக்கை | 697,315 | மீளாய்வாண்டின் போது 04 சந்தர்ப்பங்களில் மாகாண சபையிலும் பிரதேச சபையிலும் பதிவு செய்யாத வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் கூறு விலை கோரப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,817,312 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,927,310 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,371,486 | 3,480,614 | 4,095,870 | 1,633,246 | 3,258,263 | 3,413,341 | 4,304,651 | 2,273,847 |
| வாடகை | 8,003,826 | 5,552,976 | 5,521,526 | 686,519 | 6,978,800 | 4,506,216 | 4,518,517 | 599,969 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 475,130 | 919,367 | 925,867 | - | 314,000 | 321,603 | 327,723 | - |
| ஏனைய வருமானம் | 8,853,754 | 9,621,437 | 5,569,757 | 15,071,950 | 8,704,500 | 8,878,606 | 4,819,699 | 11,372,458 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை, சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீதவரியும் வரியும், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 21 சதவீதம், 95 சதவீதம் மற்றும் 10 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வாடகை அடிப்படை, சேவைக்கான கட்டணம், ஏனைய வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவை விட முறையே 31 சதவீதம், 17 சதவீதம், 86 சதவீதம் மற்றும் 59 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

#### (அ) ஆதனவரி

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரி மீதி ரூபா 1,468,697 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 05 வருடங்களை விட மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற 101 ஆதனவரி அலகுகளுக்குரிய ரூபா 529,635 கூட்டுமொத்த நிலுவை மீதியொன்று காணப்பட்டது. நிலுவை வரியை அறவிடுவது தொடர்பில் சபையின் செயற்படுநிலை நலிவான நிலையில் காணப்பட்டது.

#### (ஆ) ஏக்கர் வரி

2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டிய ரூபா 128,111 கூட்டுத்தொகையான நிலுவை ஏக்கர் வரியை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களில் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு இணங்க மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட வேண்டிய 05 கைத்தொழில்கள் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காமையின் காரணமாக ரூபா 20,000 வருமானமொன்றை சபை இழந்திருந்ததுடன் அந்த கைத்தொழில்களை பேணிச் செல்லும் போது ஏற்பட்ட சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பாக காலரீதியில் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வில் இனங்காணப்பட்ட 19 தொழில்முயற்சி அலுவல்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்த போதிலும் சபை அது தொடர்பாக நவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 4,857,250 தொகையான நீதிமன்றத் தண்டப் பண வருமானத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 263,150 தொகையான நிலுவை முத்திரை வரியை அறவிடுவதற்கு தவறியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய முத்திரை வரி வருமானம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------------

**3.1 செயலாற்றல்**

----------------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் முறையான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் கழிவுப்பொருட்கள் கொண்டு செல்லப்பட்டு அகற்றப்படுகின்ற 03 ஏக்கர் அளவிலான நிலம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் சேகரிக்கப்படுகின்ற உக்குகின்ற கழிவுகள் குழிகள் வெட்டி அகற்றப்பட்டிருந்ததுடன், முறையான கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டு அமுல்படுத்துவதற்கு தவறியிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்ககை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட மற்றும் ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்ட கெப் வண்டி மற்றும் இழுவைப் பெட்டியும் 2018 மே வரையிலும் சபை வளவில் பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) பொருத்தமான பிரகாரம் பழுதுபார்த்தல்களை மேற்கொள்வதற்கும், நீண்ட கால பயன்பாட்டிற்கு எடுக்க முடியும் என கொடகவெல டிப்போ பொறியியலாளரால் சிபாரிசு செய்யப்பட்ட ரூபா 1,300,000 பெறுமதியான டபள் ரீம் வைபரேட்டர் ரோல 2013 ஆம் ஆண்டு முதல் பழுதுபார்க்கப்படாமல் சபை வளவில் பாதுகாப்பின்றி தரித்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 திசெம்பர் மாதம் விபத்திற்கு உட்பட்டு பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்ட உழவு இயந்திரமொன்று 2018 மே வரையிலும் பழுதுபார்க்கப்படாமல் உரிய கராஜில் பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 பெறுகை

**பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒரு செலவின விடயத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 82,078 தேறிய நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 23,536 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 35 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,866,346 கூட்டுத்தொகையான மொத்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 11 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,637,619 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 80 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சபை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்காள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) செலவினங்கள் இனங்காணப்படாமை |
| | (ii) வருமானம் இனங்காணப்படாமை |
| | (iii) பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) சொத்துக்களின் பயன்பாடு | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| | (ii) நிதிஏற்பாட்டை விஞ்சி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டமை |